3. ஒழுங்குப் பிரச்சினை.

சேஷசாயி தொழிற்சாலை பிரச்னையில், முதலமைச்சர் அளித்த விளக்கம் குறித்து.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்னையை எழுப்ப விரும்புகிறேன். நேற்றைய தினம் கண்டனத் தீர்மானத்திலே பதில் அளிக்கும் நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சேஷசாயி தொழிற்சாலையில் 750 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்பதைச் சுட்டிக்காட்டியபோது, அவர்கள் யாரும் கைது செய்யப்படவில்லை என்ற கருத்துப்பட, அவர்களாகவே தாங்கள் வெளியில் செல்ல முடியாது என்றும், தாங்கள் கைது செய்யப்பட வேண்டுமென்று வற்புறுத்தியதாகவும், அவர்கள் சிறையிலே இருக்க விரும்புகிறதாகவும்—இந்தக் கருத்துக்களை அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், எனக்குக் கிடைத்துள்ள தகவல்களின்படி மறியல் செய்ததுதான் காரணம், அவர்கள் மீது பல்வேறு செக்ஷன்கள் போடப்பட்டு, கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். இன்னும் பலர் 151 பிரிவென்டிவ் டிடென்ஷன் என்கிற வகையில் முன்கூட்டியே கைது செய்யப் பட்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 9.20)

எனவே, முன்கூட்டியே கைது செய்யப்பட்டவர்கள், மறியல் செய்ததன் காரணமாக பல்வேறு செக்ஷன்களின்கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் இருப்பவர்கள் என்ற இந்த உண்மைக்கு மாறாக சரியான தகவல் இல்லாத ஒன்றை நேற்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். 750 பேரைக் கைது செய்திருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் சொன்ன தகவல் தவறானது என்று இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கிளப்பிய பிரச்சினை பற்றி கொஞ்ச நேரத்திற்கு முன்பு நான் முதல்வரோடு தொடர்பு கொண்டேன். 10½ மணி அல்லது 11 மணி சுமாருக்கு முதல்வர் அவர்கள் இங்கே வருகிறார்கள். 'நான் அதற்குப் பதில் சொல்கிறேன்' என்று சொல்லியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.